රාජ්‍ය පරිපාලන, පළාත් සභා සහ පළාත් පාලන අමාත්‍යාංශය
பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
**Ministry of Public Administration, Provincial Councils and Local Government**

ඒකාබද්ධ සේවා අංශය
නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව.

இணைந்த சேவைகள் பிரிவு
சுதந்திரச் சதுக்கம், கொழும்பு 07, இலங்கை.

**Combined Services Division**
*Independence Square, Colombo 07, Sri Lanka*

දුරකතනය / தொலைபேசி: 011- 2694560 / Telephone
ෆැක්ස් / தொலைநகல்: 011- 2692254 / Fax
ඊ- මේල් / மின்னஞ்சல்: dgcs@pubad.gov.lk / E-mail
වෙබ් අඩවිය / இணைத்தளம்: www.pubad.gov.lk / Web Site

මගේ අංකය / எனது இல / My No: R/9/2/2025
ඔබේ අංකය / உமது இல / Your No:
දිනය / திகதி / Date: 2026.10.28

அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள்,
ஆணைக்குழுக்களின் செயலாளர்கள்,
மாவட்ட செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள்,

***திறமை அடிப்படையில் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் அதிவிசேட தரத்திற்கு பதவியுயர்த்துவதற்கான போட்டிப் பரீட்சை - 2025***
***முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் அதிவிசேட தரத்திற்கு பதவியுயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2025***

பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்பட்ட மேற்கூறப்பட்ட போட்டிப் பரீட்சைப் பெறுபேறுகள் மற்றும் அதற்கமைய நடாத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில், இணைப்பு 01 மற்றும் 02 இல் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர்களை முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் அதிவிசேட தரத்திற்கு தரம் உயர்த்துவதற்கு அரச சேவை ஆணைக்குழு தீர்மானித்துள்ளது என்பது, அரச சேவை ஆணைக்குழுவின் செயலாளரின் இலக்கம் PSC/PRO/07/2187/2025 மற்றும் 2026.08.21 ஆம் திகதியிடப்பட்ட கடிதம் மற்றும் இலக்கம் PSC/PRO/07/2041/2023 மற்றும் 2026.10.27 ஆம் திகதியிடப்பட்ட கடிதம் மூலம் எனக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய குறித்த உத்தியோகத்தர்களுக்கான தரமுயர்த்தல் கடிதங்கள் எதிர்காலத்தில் அனுப்பி வைக்கப்படும்.

| **பரீட்சை** | **நியமனதாரிகளின் எண்ணிக்கை** | **தரமுயர்வு வலுபெறும் திகதி** |
|---|---|---|
| திறமை அடிப்படையில் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் அதிவிசேட தரத்திற்கு தரமுயர்த்துவதற்கான போட்டிப் பரீட்சை - 2025 | 68 | 2025.10.26 |
| முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் அதிவிசேட தரத்திற்கு தரமுயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2025 | 65 | 2025.10.19 |

02. இந்த உத்தியோகத்தர்களுக்காக முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் அதிவிசேட தரப் பதவியுடன் தொடர்புடைய கடமைப் பொறுப்புகள் தொடர்பான 10 நாள் சேவை ஆரம்பப் பயிற்சி நெறியை இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதுடன், சேவை ஆரம்பப் பயிற்சி தொடர்பான அறிவுறுத்தல்கள் இணைப்பு 03 இன் மூலம் குறிப்பிடப்பட்டுள்ளன.

03. அதற்கமைய மேற்குறிப்பிடப்பட்ட பயிற்சி நெறிக்குப் பங்குபற்றுவதற்காக குறித்த உத்தியோகத்தர்களுக்குக் கடமை விடுமுறையை அனுமதிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன். சேவை ஆரம்பப் பயிற்சியின் முடிவில் தங்களுக்கும் ஒரு பிரதி வழங்கப்பட்டு, உத்தியோகத்தருக்கு வழங்கப்படும் புதிய சேவை நிலையங்களுக்கு இணைப்பதற்கான கடிதத்திற்கமைய உத்தியோகத்தர்களைப் புதிய சேவை நிலையத்திற்கு விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

04. சேவை ஆரம்பப் பயிற்சியானது 2026.11.02 ஆம் திகதி மு.ப. 8.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளதுடன், அது தொடர்பான அனைத்து தெளிவுபடுத்தல்களும் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்படும் என்பதையும் கவனத்திற் கொள்ளவும்.

ஒப்பம் / எஸ். ஆலோகபண்டார
செயலாளர்
பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு